குளித்தலை மாவட்ட தலைமை மருத்துவமனைக்கு

# முத்தமிழறிஞர் கலைஞர் பெயர் சூட்ட நடவடிக்கை!

## சட்டப்பேரவையில் - உறுப்பினர் கேள்விக்கு அமைச்சர் மா.சுப்பிரமணியன் பதில்!

சென்னை, ஏப்.9-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின் படி, குளித்தலை மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைக்கு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பெயர் சூட்டுவதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் (07.04.2025) சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின்போது பதிலளித்தார்.

இது பற்றிய விவாதம் வருமாறு:-



**ஆம்பூர் சட்டமன்ற உறுப்பினர் கேள்விக்கு**

திருப்பத்தூர் மாவட்டம், மாதனூர் ஊராட்சி ஒன்றியம், மின்னூர் ஆரம்ப சுகாதார நிலையத்தின்கீழ் ஆலங்குப்பம் துணை சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. ஆலங்குப்பம் துணை சுகாதார நிலையத்திற்கு ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில் புதிய கட்டிடப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அந்தப் பணிகள் விரைவுபடுத்தப்பட்டு, மிக விரைவில் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும்.

இந்த அரசு அமையப்பெற்றவுடன், ஆம்பூர் சட்டமன்ற தொகுதியில் ஏற்கெனவே இரண்டு நகர்ப்புற நலவாழ்வு மையங்கள், கரப்பட்டு, வடசேரி, வீராங்குப்பம், பள்ளிப்பட்டு, வடபுதுப்பட்டு ஆகிய இடங்களில் ஐந்து சுகாதார நிலையங்களுக்கான கட்டிடங்கள், மாதனூர் மற்றும் மின்னூர் ஆகிய இடங்களில் இரண்டு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கான கட்டிடங்கள், மாதனூர் மற்றும் நரியம்பட்டு ஆகிய இரண்டு இடங்களில் ஆயுஷ் நலவாழ்வு மையங்கள், ஆம்பூர் அரசு மருத்துவனைக்கு ஒரு மருத்துவக் கட்டிடம், மாதனூரில் ஒரு வட்டாரப் பொது சுகாதார நிலையக் கட்டிடம், ஆலாங்குப்பத்தில் ஒரு துணை சுகாதார நிலையக் கட்டிடம், சோலூரில் ஒரு துணை சுகாதார நிலையக் கட்டிடம், வெங்கிலியில் ஒரு துணை சுகாதார நிலையக் கட்டிடம், நரியம்பட்டில் ஓர் ஆரம்ப சுகாதார நிலையக் கட்டிடம், ஆம்பூர், ஏ.கஸ்பாவில் ஒரு துணை சுகாதார நிலையக் கட்டிடம் என்று ரூ.24.60 கோடி மதிப்பீட்டில் கட்டிடப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதையும் தாண்டி, நம்முடைய மன்ற உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கின்ற கட்டிடங்களுக்கு புதிய கட்டிடங்கள் முன்னுரிமை அடிப்படையில் கட்டித் தருவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு, ஏறத்தாழ ரூ.28 கோடி செலவிலான புதிய கட்டிடங்கள் ஆம்பூர் சட்டமன்றத் தொகுதிக்கு வழங்கப்பட்டிருக்கிறது. சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் எதிர்காலத்தில் கட்டப்பட வேண்டுமென்று நினைக்கின்ற கட்டிடங்களுக்கு அவருடைய தொகுதி மேம்பாட்டு நிதியினை தந்து உதவ வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**பாபநாசம் சட்டமன்ற உறுப்பினர் கேள்விக்கு**

தமிழ்நாட்டில் 8713 துணை சுகாதார நிலையங்க ளில் ஏறத்தாழ 1500 துணை சுகாதார நிலையங்கள் வாடகைக் கட்டிடங்களில் இயங்கி வருகின்றன. சட்டமன்ற உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையைஏற்று, தானமாக வழங்கப்பட்ட அந்த இடத்தில் முன்னுரிமை அடிப்படையில் மிக விரைவில் புதிய துணை சுகாதார நிலையம் ஒன்று அரசின் சார்பில் கட்டித் தரப்படும்.

**அரக்கோணம் சட்டமன்ற உறுப்பினர் கேள்விக்கு**

மாதம் ஒன்றிற்கு இரண்டு, மூன்று பிரசவங்கள் மட்டுமே நடைபெறுகின்ற மருத்துவமனை, அதில் அந்த ஆயாவுக்கு வேலை எவ்வளவு நேரம் இருக்கும் என்பது சட்டமன்ற உறுப்பினருக்குத் தெரியும். எனவே இது தமிழ்நாடு முழுவதும் இருக்கிற ஒன்று என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

**குளித்தலை சட்டமன்ற உறுப்பினர் கேள்விக்கு**

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதன்முதலில் தேர்தல் களத்தில் நின்ற தொகுதி குளித்தலை. குளித்தலையில் தற்போது மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை ஒன்று தரமுயர்த்தப்பட்டு, கட்டும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. நிச்சயம், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடைய அறிவுறுத்தலைப் பெற்று, மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைக்கு கலைஞரின் பெயர் சூட்டப்படுவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

இவ்வாறு அமைச்சர் மா. சுப்பிரமணியன் பதிலளித்தார்.

---

வட்டசெயலாளர்கள் தலைமை ! கலாநிதி வீராசாமி - ஐட்ரீம்ஸ் இரா.மூர்த்தி முன்னிலை !

# இராயபுரம் கிழக்குப் பகுதியில் தண்ணீர் பந்தல்!

## ஆர்.டி.சேகர் திறந்து வைக்கிறார்! இரா.செந்தில்குமார் அறிக்கை!

சென்னை, ஏப்.09

சென்னை வடக்கு மாவட்டம் இராயபுரம் கிழக்கு பகுதி செயலாளர் இரா.செந்தில்குமார் விடுத்துள்ள அறிக்கை வருமாறு :

இராயபுரம் கிழக்கு பகுதியில் உள்ள 6 வட்டங்களிலும் கோடை வெயில்லின் தாகத்தை தணிக்க நீர்மோர் பந்தலை சென்னை வடக்கு மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ, திறந்துவைக்கிறார்

டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி, ஐட்ரீம்ஸ். இரா.மூர்த்தி எம்.எல்.ஏ, ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

வட்ட செயலாளர்கள் க.கலைச்செல்வன், காட்டன். ஜி.சதீஷ்குமார், ஆர்.வி.கணேஷ், என்.கிருஷ்ணன், க.கோவிந்தராஜ், பி.கண்ணன், ஆகியோர் தலைமை வகிக்கின்றனர்.

இராயபுரம் கிழக்கு பகுதியில் வட்டங்கள் தோறும் தண்ணீர் பந்தல் அமையஇருக்கும் 6.இடங்கள் வருமாறு : (10.04.2025 வியாழக்கிழமை)

49வது வட்ட செயலாளர் க.கலைச்செல்வன் பாலு முதலி தெரு பகல் 12:00 மணியளவில் நடைபெறுகிறது.

49(அ) வட்ட செயலாளர் காட்டன் ஜி.சதிஷ்குமார் ஜி.ஏ.ரோடு மேற்கு கல்மண்டபம் பகல் 11:50 மணிக்கு சந்திப்பில் நடைபெறுகிறது.

50வது வட்ட செயலாளர் ஆர்.வி.கணேஷ், ஜீவரத்தினம் நகர் மார்க்கெட் பகல் 12.15 மணியளவில் நடைபெறுகிறது.

50(அ) வட்டச்செயலாளர் என்.கிருஷ்ணன், கிழக்கு மாதா கோயில் அம்மன் கோயில் அருகில் பகல் 12.30 மணியளவில் நடைபெறுகிறது.

51வது வட்ட செயலாளர் க.கோவிந்தராஜ் ஜெ.பி. கோயில் சஞ்சீவிராயன் கோயில் சந்திப்பு பகல் 11.40 மணியளவில் நடைபெறுகிறது.

51(அ) வட்ட செயலாளர் பி.கண்ணன் எம்.சி,ரோடு, துர்கா கபே ஹோட்டல் அருகில் பகல் 11:30 மணியளவில் நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சியில் மாநில நிர்வாகிகள் தா.இளையஅருணா, பி.டி.பாண்டிச்செல்வம், நா.மனோகரன், ஆர்.வெற்றிவீரன், எஸ்.ஆர்.கமலக்கண்ணன், மு.கோபி, க.நாகம்மை, வி. தயாளன், வே.சிவகுமார், க. ராஜேந்திரன், ந.சண்முகம், தா. ஜெயபாலன், பி.சேகர், கு.சுந்தர், பி.ஜெயலட்சுமி, லோ. மோகன், எஸ்.சுரேஷ், அத்தோ பி.முனுசாமி, பி.குமார், க.கலைசெல்வன், என்.பாரி, கே.லட்சுமணன், ஐசிஎப். பழனி, எம்.என்.வெங்கட், மற்றும் மாவட்ட பகுதி அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் வட்ட கழக நிர்வாகிகள் கழக மூத்த முன்னோடிகள் தவறாமல் மேற்கண்ட நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளுமாறு பகுதிச்செயலாளர் இரா.செந்தில்குமார் அறிக்கையில் கூறியுள்ளார்.

---

என்.மருதுகணேஷ் தலைமை ! டி.போஸ் முன்னிலை!

# உச்சநீதிமன்றம் தீர்ப்பு! ஜார்ஜ் டவுன் நீதிமன்றத்தில் இனிப்பு வழங்கி கொண்டாட்டம்!

## கழக வழக்கறிஞர்கள் பங்கேற்பு !

சென்னை, ஏப்09

தமிழ்நாட்டு மக்களின் நலன்களை கருத்தில் கொண்டு தமிழ்நாடு சட்டமன்றத்தில் பெரும்பான்மை உறுப்பினர்களால் நிறைவேற்றப்பட்ட 10 சட்ட மசோதாக்களுக்கு அங்கீகாரம் வழங்காமல் தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவி வேண்டுமென்றே காலம் தாழ்த்தி வந்தார்.

இதனையடுத்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்திரவுப்படி மசோதாக்களுக்கு அனுமதி அளிக்க கவர்னருக்கு உத்திரவிடக்கோரி உச்சிநீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தது.

தமிழ்நாடு அரசு தொடந்த வழக்கில் ஆளுநரை கண்டித்தும், மசோதக்களுக்கு உச்சநீதிமன்றமே அனுமதியளிப்பதாகவும் கூறி வரலாற்று சிறப்புமிக்க தீர்ப்பை இன்று வழங்கியது.

இதனை கொண்டாடும் வகையில் சென்னை ஜார்ஜ் டவுன் நீதிமன்ற வாயில் அருகே சட்டத்துறை துணைசச்செயலாளர் என்.மருதுகணேஷ் தலைமையில், வழக்கறிஞர் டி.போஸ் முன்னிலையில் பட்டாசு வெடித்து இனிப்பு வழங்கி கொண்டாடப்பட்டது.

மேலும் உச்ச நீதிமன்ற தீர்ப்பை வரவேற்றும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை வாழ்த்தியும் முழக்கங்கள் எழுப்பப்பட்டன.

இந்நிகழ்ச்சியில் ஜெ.இராஜேந்திரன், டி.மதன்ராஜ், ஏ. வெங்கடேஷ்குமார், ஏ.கே. உமாசங்கர், டி.சீனிவாசன், சி. சிரீதர், டி.கிருஷ்ணமூர்த்தி, என்.யுகநாதன், டி.சக்திவேல், தங்கேஸ்வரன், எஸ்.மோகனசுந்தரம், எஸ்.பீட்டர்வெற்றிசெல்வன், தாமோதரன், எம். ஜி.அப்துல்முஜீப், எஸ்.பிரபு, ஆர்.மகேஷ்வரன், ஏ.கஜேந்திரன் மற்றும் வழக்கறிஞர்கள் பலர் பங்கேற்றனர்.

---

திருநெல்வேலியைத் தலைமையிடமாகக் கொண்டு – இரண்டாவது

# மருத்துவப் பல்கலைக் கழகம் அமைத்து முத்தமிழறிஞர் கலைஞர் பெயரைச் சூட்ட வேண்டும்!

## சட்டப்பேரவையில் – பாளையங்கோட்டை மு.அப்துல் வஹாப் பேச்சு!

**சென்னை, ஏப்.8 - சட்டப்பேரவையில் வருவாய்த் துறை மானியத்தில் பாளையங்கோட்டைத் தொகுதி உறுப்பினர் மு.அப்துல் வஹாப் பேசுகையில் திருவெல்வேலியைத் தலைமையிடமாகக் கொண்டு இரண்டாவது மருத்துவப் பல்கலைக் கழகம் அமைத்து அதற்கு முத்தமிழறிஞர் கலைஞர் பெயரை சூட்ட வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்.**

சட்டப்பேரவையில் வருவாய்த்துறை மானியக் கோரிக்கையில் பாளையங் கோட்டைத் தொகுதி மு. அப்துல் வஹாப் பேசியதாவது :-

எங்கள் ஊனில், உதிரத்தில் கலந்திட்ட முத்தமிழறிஞர் கலைஞருக்கு வணக்கம்.

உரிமைகளை பறிப்பவரின் முதுகெலும்பை முறிக்கின்ற முன்னேற்ற கழகத்தின் முதுமகன் கலைஞரின் முதன்மை படைவீரர். . .

பாய்ந்து வந்த பெரு வெள்ளத்தையும், சீறிவந்த பெரும்புயலையும், புரட்டிப்போடும் பூகம்பத்தையும் துணிவாலே அடக்கிடும் தூயவர் ஓய்வெடுக்க மனமின்றி ஓயாமல் உழைத்து ஒளிர்கின்ற சூரியன் முதல்வர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களை முன்னெடுத்து. . .

முழு உலகும் பாராட்ட முத்திரை பதிக்கின்ற முன்னேற்றக் கழகத்தின் முதல் மகன். வித்தகனாய் வீறு கொண்டு வினையாற்றி வெற்றி கண்ட வேந்தர்.

கரும்பு தந்த தீஞ்சாறாய், கனி தந்த நறுஞ்சுளையாய், கவின் செய் முல்லையாய், அரும்பு தந்த வெண்ணகையாய், குறிஞ்சி மலர் தந்த செந்தமிழாய் வந்து உதித்த உதயநிதி ஸ்டாலின் அவர்களே, சிறப்புத் திட்ட செயலாக்கத் துறையை சிறப்புடன் நிர்வகித்து பல்வேறு திட்டங்களை மக்களுக்கு செயல்படுத்த வியூகங்கள் வகுத்திடும் தமிழ்நாடு துணை முதலமைச்சர் அன்பிற்குரிய உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு வணக்கம்.

சட்டமன்றத்தின் மூத்த உறுப்பினரும் அவை முன்னவருமான நீர்வளத் துறை அமைச்சர் அவர்களுக்கு வணக்கம். தாமிரபரணி பாய்ந்தோடும் வீரம் விளைந்த நெல்லை சீமையில் எங்களை வழிநடத்தி, நெல்லை மாவட்டம் சிறப்பாக திகழ, எங்கள் மாவட்ட மக்களுக்காக உழைக்கிற, காவிரிக்கரை தந்த தங்கம் திருநெல்வேலி மாவட்ட பொறுப்பு அமைச்சர் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் கே.என். நேரு அவர்களுக்கு வணக்கம். மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், துணை சபாநாய கர், அரசுக் கொறடா உள்ளிட்ட அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் வணக்கத்தினைத் தெரிவித்துக்கொள்கின்றேன். எனக்கு வருவாய் பேரிடர் மேலாண்மைத் துறையில் பேசுவதற்கு வாய்ப்பளித்த இப்பேரவைக்கு நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**பிரமாண்ட கலைஞர் நூலகம்!**

எனது தொகுதியான பாளையங்கோட்டையில் குலவணிகர்புரத்தில் ரூ.120 கோடியில் ‘Y’ வடிவ இரயில்வே மேம்பாலம், பிரம்மாண்ட கலைஞர் நூலகம், மேலப்பாளையம் பகுதியில் ரூ.9 கோடியில் நான்கு வழிச் சாலை, மேற்கு புறவழிச் சாலை, தாமிரபரணி தூய்மைப்படுத்தும் திட்டம், நெல்லை பேட்டையில் பாழடைந்து கிடந்த தென்னிந்திய கூட்டுறவு நூற்பாலையில் சிட்கோ தொழிற்பேட்டை, முத்தூரில் சிட்கோ தொழிற்பேட்டை, நாங்குநேரி சிப்காட், மூலக்கரைப்பட்டி சிப்காட் மற்றும் பைபாஸ் சாலை இன்னும் எண்ணற்ற திட்டப் பணிகளை நிறைவேற்ற வாரி வழங்கும் வள்ளலாக அள்ளி அள்ளி தந்தமைக்கு மகிழ்ச்சியுடன் நன்றியினை காணிக்கையாக்குகின்றேன்.



திருநெல்வேலி மாநகராட்சியின் அங்கங்களாக நெல்லை, பாளை, மேலப்பாளையம் ஆகிய மூன்று நகரங்களும் திகழ்கின்றன. திருநெல்வேலி வருவாய் வட்டம், பாளையங்கோட்டை வருவாய் வட்டம் ஆகிய இரண்டு வருவாய் வட்டங்களில் இந்த மூன்று நகரங்களும் உள்ளடங்கியிருக்கின்றன. நகரப் பகுதிகளுடன் விரிவாக்கப் பகுதிகளும் அடங்கியிருக்கின்றன.

பாளையங்கோட்டை வட்டத்திற்குட்பட்ட பாளையங்கோட்டை குறுவட்டத்தில் 19 வருவாய் கிராமங்கள் உள்ளன. பாளை நகரத்தில் பள்ளி, கல்லூரிகள் பெருமளவில் உள்ளன. அரசு ஊழியர்களும் நிறைந்துள்ளனர். பள்ளி, கல்லூரிகளில் பயிலும் மாணவ, மாணவிகளும் பொது மக்களும் தேவையான சான்றுகளை பெறுவதில் தாமதம் ஏற்படுகின்றது.

எனவே பாளையங் கோட்டை குறுவட்டத்தை பிரித்து பாளையங் கோட்டை, மேலப்பாளையம், குலவணிகர்புரம், வி. எம்.சத்திரம் ஆகிய இடங்களை தலைமை இடமாகக் கொண்டு நான்கு குறுவட்டங்களை புதிதாக அமைத்து சீரமைக்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, திருநெல்வேலி வட்டத்தில் உள்ள திருநெல்வேலி குறுவட்டத்தில் 19 வருவாய் கிராமங்கள் உள்ளன. திருநெல்வேலி குறுவட்டத்தை இரண்டாகப் பிரித்து திருநெல்வேலியை தலைமை இடமாகக் கொண்ட ஒரு வருவாய் குறுவட்டமும், பேட்டையை தலைமை இடமாகக் கொண்டு புதிய வருவாய் குறுவட்டமும் அமைத்திட வேண்டுமென்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**பட்டா வழங்க வேண்டும்!**

பாளையங்கோட்டை தொகுதியில் நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ள 7வது வார்டு, பாளையங்கோட்டை மனகாவலம் பிள்ளை நகரில் 1000 குடும்பங்களும், வார்டு 4, 5 திம்மராஜ புரத்தில் இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டிலுள்ள பிற்படுத்தப்பட்டோர் நலத் துறைக்கு சொந்தமான இடத்தில் கட்டணம் செலுத்தும் 1000 குடும்பங்களும், நீர்நிலை புறம்போக்கில் வார்டு 5, கக்கன் நகர், அண்ணா நகர், பாளையங்கோட்டை 39வது வார்டு, அண்ணா நகர், மருத்துவமனை கட்டுப்பாட்டிலுள்ள பாளையங் கோட்டை 39வது வார்டு, இந்திரா நகர், எம்.ஜி.ஆர் நகர், பெரியார் நகர், வருவாய்த் துறை புறம்போக்கு இடத்தில் 32வது வார்டு, நேசநாயனார் கோவில் தெரு, எம்.ஜி.ஆர் காலனி, இலந்தைகுளம் வார்டு 43, குறிச்சி வேடுவர் காலனி, அழகிரிபுரம், வீரமாணிக்கபுரம் 4வது வார்டு, திம்மராஜபுரம், மேலூர், பசும்பொன் நகர், 29வது வார்டு, மீனாட்சிபுரம் அருந்ததியர் பாரதியார் காலனி, லெட்சுமிபுரம்

8வது வார்டு சத்யா நகர் 80 வீடுகளும், செந்தில்நகர், வெட்டுவான்குளம் 9வது வார்டு, செந்தில் நகர் முப்பிடாதி அம்மன் கோவில் கீழத் தெரு, 10வது வார்டு, அம்பேத்கர் நகர், அருந்ததியர் தெரு ஆகிய பகுதிகளுக்குப் பட்டா இல்லாமல் கட்டட அனுமதி, குடிநீர் இணைப்பு, மின்சார இணைப்பு, வங்கிக் கடன் பெற இயலாமல் தவிக்கின்றனர். எனவே, தொகுதியிலுள்ள பல்வகைப்பட்ட நிலங்களில் நீண்டகாலமாக குடியி ருந்துவரும் பொதுமக்களுக்குப் பட்டா வழங்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

நீர்நிலைப் புறம்போக்கில் குடியிருந்துவரும் மக்களுக்குப் பட்டா வழங்கிட அந்தக் குளத்தின்மூலம் பயன்பெறும் பாசன நிலங்கள் எதுவும் இல்லை என்றால், நீர்வளத் துறையில் ஆட்சேபணையில்லாச் சான்று பெற்று, பட்டா வழங்குவது வழக்கில் இருந்தது. தற்போது நீதிமன்ற உத்தரவைக் காரணம்காட்டி, நீர்நிலைப் புறம்போக்கு நிலங்களிலும், அறநிலையத் துறை சம்பந்தப் பட்ட இடத்திலும் நீண்டகாலமாக குடியிருப்பவர்களுக்குப் பட்டா வழங்குவது தவிர்க்கப்படுகிறது.

50 ஆண்டுகளுக்கும் மேலாக குடியிருப்பவர்களை, இனிமேல் அங்கிருந்து அகற்றுவது மிகவும் சிரமம். எனவே, மக்கள் நலன் கருதி விதிவிலக்கு அளித்து, பட்டா வழங்கிட உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

ஏற்கெனவே பிற்படுத்தப்பட்டோர் நலத் துறைக்கு அந்த இடம் போய்விட்டது. பெருமாள்புரம் விரிவு அபிவிருத்தித் திட்டம் 1998 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டு, அரசாணை வெளியிடப்பட்டது. அதனால் நல்ல, பெரிய, அருமையான, சாலைகள் மக்கள் பயன்பாட்டில் உள்ளன. ஆனால், *Section 38 of the Tamil Nadu Town and Country Planning Act*ன்படி நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து, திட்டச் சாலைகள் இரத்து செய்யப்படுகின்றன. இதனால் நிலவழி, நீர்வழி ப்பாதைகள் முழுவதுமாக அடைக்கப்படுகின்றன. நீர்வழிப்பாதைகள் அனைத்தும் அடைக்கப்படுவதால், மழைக் காலங்களில் வீடுகளுக்குள் மழைநீர் புகுந்து மக்கள் மிகவும் சிரமப்படுகின்றனர். எனவே, நகர் ஊரமைப்புச் சட்ட விதிகளில் திருத்தம் செய்து, இரத்து செய்யப்பட்ட திட்டச் சாலைகள் அனைத்தும் உருவாக்கப்பட உரிய வழிவகைகள் செய்திட வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**பாளையங் கால்வாயை சீரமைக்கும் பணி!**

பாளையங்கோட்டை தாமிரபரணி ஆற்றுப் பாசனத் திட்டத்தின்கீழ் பாசன வசதி பெறும் கால்வாய், பாளையங்கால்வாய் ஆகும். இந்தக் கால்வாய் மூலம் 9,500 ஏக்கர் பாசன வசதி பெறுகின்றன. பாளையங்கால்வாய் 42 கி.மீ. நீள தூரம் பயணிக்க வேண்டியுள்ளதால், பாளையங்கால்வாய் சீரமைக்கும் பணிக்கு ரூ.48 கோடியே 38 இலட்சம் நிதி தேவைப்படுகிறது. நிதியை ஒதுக்கி சீரமைக்கும் பணியை மேற்கொள்ளுமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**இரண்டாவது மருத்துவ பல்லைகைக் கழகம்!**

தமிழ்நாட்டில் கழக ஆட்சியில் மேம்பட்ட சுகாதர வசதிகள் கொண்ட மாநிலமாக இந்தியாவில் முதலிடம் பெற்று விளங்குகிறது. தற்போது, தமிழ்நாட்டில் மருத்துவக் கல்வி தமிழ்நாடு டாக்டர் எம். ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக்கழக நிர்வாகக் கட்டுப்பாட்டில் இயங்குகிறது. எம்.ஜி.ஆர். மருத்துவப் கழகத்தின்மூலம் சுமார் 300 அரசு மற்றும் தனியார் கல்வி நிறுவனங்கள் இயங்கி வருகின்றன. இப் பல்கலைக்கழகம், சென்னையில் இருப்பதால், தென்மாவட்ட மாணவர்கள் பல்கலைக்கழகத்தின் சேவைகளால் பயன்பெற இயலாமல் தவிக்கின்றனர். எனவே, தென்மாவட்ட மருத்துவ மாணவர்கள் நலன் கருதி, திருநெல்வேலியைத் தலைமையிடமாகக் கொண்டு, இரண்டாவது மருத்துவப் பல்கலைக் கழகம் அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திருநெல்வேலியில் இரண்டாவது மருத்துவப் பல்கலைக்கழகம் அமைத்து பல்கலைக்கழகத்திற்கு முத்தமிழறிஞர் கலைஞர் மருத்துவப் பல்கலைக்கழகம் என்று பெயர் சூட்டிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திருநெல்வேலி, தென்காசி, தூத்துக்குடி, கன்னியாகுமரி ஆகிய நான்கு மாவட்ட மக்களின் மருத்துவத் தேவைகளை, திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை பூர்த்தி செய்துவருகிறது. பல்வேறு புதிய திட்டங்களைத் தீட்டி, கழக அரசு மருத்துவமனையை வளர்ச்சி பெறச் செய்துள்ளது. *Multispeciality Hospital* உயர்தர சிறப்பு மருத்துவமனையில், *MRI scan* வசதி இல்லை. எனவே, நோயாளிகள் நலன் கருதி *MRI* வசதி ஏற்படுத்தித் தர வேண்டுமென அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பழைய மருத்துவமனையிலிருந்து நோயாளிகள் உயர்தர சிறப்பு மருத்துவமனைக்குச் செல்ல மருத்துவமனை சார்பில் வாகன வசதி ஏதும் இல்லாததால் நோயாளிகள் மிகவும் சிரமப்படுகின்றனர்.

எனவே, தனியாக வாகன வசதி ஏற்பாடு செய்து தருமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன். இரத்த வங்கி சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இம்மருத்துவமனையில் இரத்த வங்கி குழுவினர் மருத்துவர்களுடன் இணைத்து மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளுக்கு சென்று முகாம் நடத்தி இரத்தம் சேகரிக்கும் பணியில் ஈடுபடுகின்றனர். முகாமில் சேகரிக்கும் இரத்தங்களை பாதுகாப்பாக கொண்டுவர நவீன தொழில்நுட்ப வசதிகள் கொண்ட சிறப்பு வாகனம் பெறுவதற்கு நிதி ஒதுக்கீட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**நகர்ப்புறக் காடுகள்!**

தமிழ்நாடு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பசுமை நில பரப்பளவை விரிவுபடுத்தும் நோக்கில் தமிழகம் முழுவதும் 15 இடங்களில் நகர்ப்புறக் காடுகள் வனத் துறை துணையுடன் அமைத்திட திட்டமிட்டுள்ளது. திருநெல்வேலி மாநகராட்சிப் பகுதியில் பங்கஜம் நகர் என்ற இடத்தில் நகர்ப்புறக் காடுகள் அமைத்திட 1.45 ஏக்கர் இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. நகர்ப்புறக் காடுகள் திட்டத்தை உடனடியாக செயல்படுத்திட வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, திருநெல்வேலி மாவட்ட நீதிமன்ற வளாகத்தில் புதிய ஒருங்கிணைந்த நீதிமன்ற கட்டடம் கட்டுவதற்கு ரூ.76 கோடியில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு அரசின் ஒப்புதலுக்கு அனுப்பபட்டுள்ளது. புதிய நீதிமன்ற கட்டடம் கட்டுவதற்கான நிதி ஒதுக்கி தருமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன். திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி, தென்காசி ஆகிய நான்கு மாவட்டங்களில் போதை மருந்துகள் மற்றும் மன மயக்க பொருட்கள் சம்பந்தமாக பதிவு செய்யப்படுகிற வழக்குகளை விசாரிக்க ஒரு சிறப்பு நீதிமன்றம் .

பாளையங்கோட்டை தாலுகா நீதிமன்றம் இரண்டு நீதிமன்றங்களும் பாளையங்கோட்டையில் மாவட்ட நீதிமன்ற வளாகத்தில் செயல்படும் வகையில் ஒதுக்கீடு செய்து தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். ஒன்றிய அரசின் வக்ஃப் சட்ட திருத்த முன்வடி வினை திரும்பப் பெற வேண்டும் என்று வலியுறுத்தி, தமிழ்நாடு சட்டமன்றத்தில் தீர்மானத்தை நிறைவேற்றிய முதல்வர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்த்திருநாட்டின் வரலாற்று சிறப்பு மிக்க இந்த சட்டமன்றப் பேரவையில் நான் அடியெடுத்து வைத்திட வழிவகுத்து கொடுத்த பாளையங்கோட்டை சட்டமன்றத் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கு நன்றியுணர்வை வெளிப்படுத்தும்வகையில் மக்கள் கோரிக்கைகளை இந்த அவையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்பாக பதிவு செய்துள்ளேன். இன்னும் தொகுதி கோரிக்கைகள் இருக்கின்றன.

தமிழ்நாடு போராடும்! தமிழ்நாடு வெல்லும்! ஒன்றிய அரசின் ஓரவஞ்சத்தை தடுத்து அடக்கி இந்திய துணைக்கண்டத்தில் முத்துவேல்கருணாநிதிஸ்டாலின் என்ற மந்திரச்சொல் வெல்லும் என்று கூறி என் உரையை நிறைவு செய்கிறேன்.

இவ்வாறு மு.அப்துல் வஹாப் பேசினார்.

---

எழும்பூர் அரசு குழந்தைகள் நல மருத்துவமனை:

# ரூ.1.19 கோடி மதிப்பீட்டில் மூன்று புதிய மின்தூக்கிகள்!

## இ.பரந்தாமன் எம்.எல்.ஏ., தொடங்கி வைத்தார்!

சென்னை, ஏப்.9-

எழும்பூர் அரசு குழந்தைகள் நல மருத்துவமனை “E” பிளாக்கில் 1.19 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட மூன்று புதிய மின்தூக்கிகளைக் கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன் பொதுமக்கள் மற்றும் மருத்துவமனை ஊழியர்கள் பயன்பாட்டுக்குத் தொடங்கி வைத்தார்.

எழும்பூர் அரசு குழந்தைகள் நல மருத்துவமனையின் “E” பிளாக்கில் அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் அமைக்கப்பட்ட மூன்று மின்தூக்கிகளும் தகுதி வாய்ந்த நிறுவனத்திடமிருந்து கொள்முதல் செய்யப்படவில்லை என்பதோடு, அம் மின்தூக்கிகளின் இயந்திர பாகங்களும் தரம் வாய்ந்தவையாக இல்லை. இதன் காரணமாக இம்மின்தூக்கிகள் அடிக்கடி பழுதுபட்டுப் பயன்படுத்த முடியாத நிலையில் இருந்து வந்தன.

இம்மருத்துவமனையின் “E” பிளாக் எட்டு மாடிகளும் 300 படுக்கைகளும் கொண்ட பிரிவாகும். அங்கிருந்த மூன்று மின்தூக்கிகளும் பழுதடைந்து போனதால், நோயாளிகளும், மருத்துவர்களும், பிற ஊழியர்களும் மிகுந்த சிரமத்துக்கு ஆளாகி வந்தனர்.

இதனை ஆய்வு செய்த எழும்பூர் சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன் பழுதடைந்து பயன்படுத்த முடியாத நிலையில் இருந்த அம்மூன்று மின்தூக்கிகளையும் அகற்றிவிட்டு, அதன் இடத்தில் தரமான புதிய மின்தூக்கிகளை அமைத்துத் தருமாறு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரிடம் கோரி கடிதம் அளித்ததைத் தொடர்ந்து, கழக அரசால் 1.19 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மூன்று புதிய மின்தூக்கிகள் அமைக்கப்பட்டு, அவற்றைச் சட்டமன்ற உறுப்பினர் இ. பரந்தாமன் பொதுமக்கள் மற்றும் மருத்துவமனை ஊழியர்களின் பயன்பாட்டுக்குத் தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்வில் குழந்தைகள் நல மருத்துவமனை இயக்குநர் மருத்துவர் லெட்சுமி மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.



எழும்பூர் அரசு குழந்தைகள் நல மருத்துவமனை ”E பிளாக்கில் 1.19 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட மூன்று புதிய மின் தூக்கிகளைப் பொதுமக்கள் மற்றும் மருத்துவமனை ஊழியர்களின் பயன்பாட்டுக்கு சட்டமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் இ.பரந்தாமன் தொடங்கி வைத்தார்.